
NEWSLETTER
DIOCESE OF DHARMAPURI
Vol.29 July-2025 No.7





Confirmation at Averipalli




Feast Mass & Confirmation at Harur



Laity Seminar at Kalaiaruvi



Bishop's Birthday Celebration



Mass at Cana Retreat centre

# BISHOP'S MESSAGE

**My Dear Fathers, Sisters and Laity in Risen Christ,**

We celebrate the feast of St. Thomas the Apostle on 3rd July every year and we are reminded of the profound impact of faith on our lives. St. Thomas, often referred to as "Doubting Thomas," is a powerful symbol of the human experience of doubt and the transformative power of encountering the risen Christ.

St. Thomas' feast is a celebration of his unwavering commitment to the truth and his unshakeable faith in Jesus Christ. His story serves as a reminder that faith is not about blind acceptance, but about encountering the living God. Through his journey, we are reminded that doubt can be a catalyst for deeper faith and understanding.

As we reflect on St. Thomas' life and legacy, let us consider the following aspects of faith

**Faith is a journey:** St. Thomas' journey of faith was marked by moments of doubt and uncertainty. Yet, he persevered and ultimately declared, "My Lord and my God!" (John 20:28). Our own faith journey may be marked by similar moments of doubt and uncertainty. Yet, with perseverance and openness to God's presence, we can deepen our faith and relationship with Jesus.

**Encountering the risen Christ:** St. Thomas' encounter with the risen Christ transformed him into a bold witness of the Gospel. As we reflect on our own encounters with Jesus, let us ask ourselves: How has Jesus touched my life? How can I share this experience with others?

**The power of testimony:** St. Thomas' testimony of faith has inspired countless individuals throughout history. As we share our own testimony of faith, we can inspire others and build a community of believers.

As followers of St. Thomas, we are called to live out our faith with courage and conviction. May we be inspired by his example to:

**Share the Good News:** St. Thomas was a bold witness of the Gospel, proclaiming the Good News to those around him. May we, too, share the Good News with others, using our words and actions to spread love, hope, and joy.

**Serve the marginalized:** St. Thomas' ministry took him to distant lands, where he served the marginalized and proclaimed the Gospel. May we, too, serve those in need, using our talents and resources to build a more just and compassionate world.

**Build communities of love and compassion:** St. Thomas' legacy is a testament to the power of community and the importance of building relationships with others. May we, too, build communities of love and compassion, supporting one another on our faith journeys.

As we celebrate the feast of St. Thomas the Apostle, may we be inspired by his example to deepen our faith, share the Good News, and serve those around us. May the intercession of St. Thomas guide and strengthen us on our journey of faith. May we continue to proclaim the Gospel with courage and conviction, and may our lives be a testament to the transformative power of faith.

Happy feast of St. Thomas the Apostle!!!

**May God bless you all!!!**

With my prayers and blessings,

**✠ Lawrence Pius, D.D.,**

Bishop of Dharmapuri

# ஆயரின் இறை சிந்தனை

கிறிஸ்து இயேசுவில் அன்புமிக்க அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, இறைமக்களே!

உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவித்த திருத்தூதர்களில் ஒருவர் புனித தோமா. இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான தோமா மிக மிக சிறப்பு பெற்றதற்கு காரணம், அவர் இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு அதனிலும் மேலாக இயேசுவின் உயிர்ப்பில் பெரும் பங்குவகித்தவர். எனவே தான் அவர் மிகச் சிறப்புமிக்க திருத்தூதராக திகழ்ந்து வருகிறார். இத்தகைய சிறப்புமிக்க இயேசுவின் சீடர்களுள் ஒருவரும், இந்தியாவின் திருத்தூதருமான புனித தோமாவின் பெருவிழாவை நாம் ஜுலை மாதத்தில் கொண்டாடி மகிழ்கின்றோம்.

நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்! என்று இவரைத் தவிர வேறு எந்தச் சீடரும் அறிக்கையிடவில்லை. இயேசுவின் சீடர்களில் ஒருவராக அவருடன் மூன்று ஆண்டுகள் பயணித்த புனித தோமா, உயிர்த்த ஆண்டவரை நேரில் பார்த்தால்தான் நம்புவேன் என்று ஆண்டவரைக் கண்டுகொள்கிறார்.

புனித தோமா இயேசுவின் அன்பை ஏற்று, இயேசுவின் அன்பை இந்திய பகுதியில் விதைக்க வந்தவர் ஆவார். கேரளா வழியாக கிறிஸ்துவின் படிப்பினைகளை சென்னையின் பல பகுதிகளில் அறிவித்தவர். மேலும் அவர் தடம்பதித்த இடங்கள், பணியாற்றிய இடங்கள், இன்று நம்பிக்கையின் விருட்சமாக, வரலாற்று சின்னங்களாக உயர்ந்திருப்பதை நாம் அறிய முடியும்.

நாம் புனித தோமாவை சந்தேகப் பேர்வழி என்று சொல்கிறோம். இன்றைய நம் மனித வாழ்வில் கடவுள் மீதான சந்தேகங்களும் மனப்போராட்டங்களும் துயரங்களும் தோல்விகளும் ஏமாற்றங்களும் எண்ணிலடங்கா வகையில் ஊற்றெடுக்கும்போது, நாமும் கடவுளின் இருப்பைக் குறித்து கேள்விகள் எழுப்பத் தொடங்கிவிடுகிறோம். கடவுள் உண்மையில் இருக்கிறாரா? அவர் இருந்திருந்தால் எனக்கு இப்படியெல்லாம் நடந்திருக்குமா? எல்லாம் என் தலைவிதி படிதான் நடக்கிறது. நான்

கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்றெல்லாம் கூறி நமது நம்பிக்கையற்ற தனத்தை வளர்த்துக் கொள்ளவே விழைகின்றோம்.

தோமாவும் உயிர்த்த ஆண்டவர்மீது சந்தேகம் கொண்டவராய் மிகவும் குழப்பமான மனதுடன் இருந்தார். எனவே தான், அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலைவிட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன் என்றெல்லாம் கூறி தோமா ஆண்டவர்மீது அவநம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் ஆண்டவர் அவர் முன்னால் வந்தபோது தோமா தான் விரும்பியவாறெல்லாம் அவரைத் தொட்டுப் பார்க்கவில்லை, மாறாக, அவரைக் கண்டதுமே “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்”! என்று அறிக்கையிட்டு தனது அவநம்பிக்கையை விலக்கி நம்பிக்கை நிறைந்த வாழ்விற்குத் தன்னை புதுப்பித்துக் கொண்டார்.

இயேசுவின் திருக்காயங்களை தன் கரங்களால் தொட்டுணர்ந்து அவர்மீது கொண்ட அன்பை உறுதி செய்துகொண்டவர். மேலும் அவரது இறைத் தன்மையை முற்றிலும் உணர்ந்து, என் கடவுளே! என் ஆண்டவரே! என்ற நம்பிக்கையின் உயிர் அலைகளை இந்த உலகிற்கு எடுத்துரைத்தவர். ஆகவே, புனித தோமாவைப் போன்று நாமும் நம்பிக்கை குறைந்த நிலையிலிருந்து நம்பிக்கை நிறைந்த நிலைக்குக் கடந்துசெல்வோம்.

தோமாவுக்கு ஆண்டவர்மேல் தனிப்பற்று. அதனால்தான் இயேசு இலாசரை உயிர்ப்பிக்கச் செல்லும்போது மற்ற திருத்தூதர்கள் அவரது உயிருக்கு ஆபத்து என்று தடுத்தபோது, தோமா, “நாமும் ஆண்டவருடன் சென்று அவரோடு சாக வேண்டியிருந்தாலும் தயாராய் இருப்போம்” (யோவான் 11:16) என்று கூறியதை சிந்தித்து பார்க்கவேண்டும்.

இயேசு சொல்கிறார் “தோமா நீ கண்டதால் என்மீது நம்பிக்கை கொண்டாய், காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்”

என்ற மறைவாக்கு அவரால் நமக்குக் கிடைத்த இறைவாக்கு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கிறிஸ்து இயேசுவை நாம் காணாமலேயே நம்பி, அவரின் அன்பு பிள்ளைகளாக இம்மண்ணில் வாழ்வோம். புனித தோமா குருதி சிந்திய இந்திய தேசத்தில் வாழும் நாம், இம்மண்ணின் புனிதத்தை உணர்ந்து, எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகூறுவோம்.

புனித தோமாவின் வாழ்வு நம் நம்பிக்கை வாழ்க்கையை ஆழப்படுத்த வழிகாட்டும் வாழ்வு என்றால் மிகையாகாது. புனித தோமையாரின் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளான என் ஆண்டவரே! என் தேவனே! என்று சொல்லி நாம் நமது நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு வாழ முயன்றிடுவோம்.

புனித தோமாவின் இடைவிடாத பரிந்துரை உங்கள் குடும்பங்களில் நிலைத்திருப்பதாக. தோமாவின் வாழ்வை முன்மாதிரியாக் கொண்டு ஆண்டவரின் கட்டளைகளை கடைபிடிப்போம். ஆண்டவரில் தஞ்சமடைந்து எதிர்நோக்கின் திருப்பயணிகளாக வாழ்வோம். அதற்கான அருளை இறைவனிடம் வேண்டுவோம்.

புனித தோமாவின் பரிந்துரையால், ஆண்டவரில் ஆழமான நம்பிக்கைக் கொள்வோம்!

இறைவனின் அருளும் அன்பும் ஆசீரும் என்றென்றும் உங்கள்மீது தங்குவதாக!

அன்புடனும் இறையாசீருடனும்

**லாரன்ஸ் பயஸ்**

தருமபுரி மறைமாவட்ட ஆயர்

# BISHOP'S DESK

**1.Collection for Pontifical Society of St. Peter the Apostle**

29th of June,Sunday will be the day for the Special collection for the Pontifical Society of St. Peter the Apostle, which helps for the formation of the seminarians to Priesthood and Religious life. May I remind all the Parish Priests to remit the amount to the Diocesan Procurator as early as possible.

**2.Diocesan Educational Fund**

As every year, this year too I make an earnest appeal to all the Parish Priests and the Heads of the Institutions, both diocesan and Religious to contribute your mite to the education of the poor and deserving children of our diocese. Please be generous for this cause.

**3. On – Going Formation**

There will be On – Going formation for diocesan clergy next month. The dates for the on - going formation this year will be on 5th and 6th August 2025. Please mark these dates in your diary. All diocesan priests are expected to attend without fail.

**4. Clergy Monthly Recollection** for the month of July will be at the Vicariate level.

**BISHOP'S PROGRAMME- JULY 2025**

| Date & Day | Time | Programme |
|---|---|---|
| 1& 2.7.2025<br>Tue & Wed | | Classes at St. Peter's Seminary, Bangalore |
| 3.7.2025<br>Thursday | 4.00 pm | Thanksgiving mass,<br>declaration of St.Thomas mount as minor basilica, Chennai |
| 4&5.7.2025<br>Fri & Sat | | 26th CBCI Bishops - Theologians Colloquium at NBCLC Bengaluru |

| | | |
|---|---|---|
| 5.7.2025<br>Saturday | 4.30 pm | Feast of Our Lady of Carmel, Sogathur |
| 6-10.7.2025<br>Sun - Thu | | TNBC / TNLBC Meeting at Poondi |
| 13.7.2025<br>Sunday | 8.30 am | Feast Mass & Confirmation, Krishnagiri |
| 14.7.2025<br>Monday | 10.00 am | Commisions secretaries' meet,<br>Bishops House |
| 17.7.2025<br>Thursday | 11.00 am | General body meeting, DSSS |
| | 3.00 pm | Retreat Mass, Sogathur |
| 18.7.2025<br>Friday | | Flag hoisting & Mass, Thalampur<br>(Chingleput Diocese ) |
| 19.7.2025<br>Saturday | 10.00 am | Silver Jubilee Mass of Bro.Alex SG,<br>Kethampatty |
| 20.7.2025<br>Sunday | 8.30 am | Feast mass, Cathedral, Dharmapuri |
| | 11.00 am | SC/ST commission general body<br>meeting,Bishop's house |
| | 6.00 pm | Madha Tv Mass, Salem |
| 21-23.7.2025<br>Mon - Wed | | Classes at St. Peter's Seminary, Bangalore |
| 26.7.2025<br>Saturday | 10.00 am | Silver Jubilee Mass of Fr.Zacharias,<br>Kandikuppam |
| | 6.00 pm | Mass, Vetuvakanni<br>(Chingleput Diocese ) |
| 27.7.2025<br>Sunday | 11.00 am | First Holy Communion and Book release,<br>Agraharam |
| | 6.00 pm | Feast Mass, Katpadi |
| 28-30.7.2025<br>Mon - Wed | | Classes at St. Peter's Seminary, Bangalore |
| 31.7.2025<br>Thursday | 3.00 pm | Retreat Mass, Sogathur |

# Diocese of Dharmapuri
# New Senate members - 30th June 2025

## I.Elected Senate members

1. Fr.S.Savariappan
2. Fr.S.Jesudoss
3. Fr.R.Adiruben Nolase
4. Fr.M.George
5. Fr.C.Micheal Andrews
6. Fr.F.Jackson Louis
7. Fr.R.Arockiyasamy
8. Fr.I.Robert
9. Fr.Chinnapan
10. Fr.R.Micheal Raj (Jr)

## II.Ex – Officio

11. Msgr.Arockia Savariappan - Vicar General
12. Fr.Isaias - Procurator
13. Fr.A.Susai Raj - Chancellor
14. Fr.S.James - Superintendent of Schools

## III.Nominated Members

15. Fr.K.Maria Joseph
16. Fr.L.Zecharias
17. Fr.Martin Christudoss
18. Fr.Albert William
19. Fr.Antony Pushparaj
20. Fr.Y.Gnanapragasam

**Bishop.Lawrence Pius DD.,**
Bishop of Dharmapuri

# மறைமாவட்ட திருமண வகுப்பு

**2025 ஜுலை மாத திருமண வகுப்புகள்:**

நாள் : 2025 ஜுலை 12, 13 (சனி, ஞாயிறு)

இடம் : மேய்ப்பு பணி நிலையம், தருமபுரி.

**குறிப்புகள் :**

- வகுப்புகள் காலை 9.30 மணிக்கு துவங்கும். நேரம் தவறாமல் வந்து பங்கெடுக்க அறிவுறுத்தப்படுகிறீர்கள். மாலை 4 மணிக்கு வகுப்புகள் முடிவடையும்.
- வகுப்புக்கு வரும் இளைஞர்/இளம்பெண்களின் பெற்றோர் இரண்டாம் நாளில் நடக்கும் சிறப்பு பயிற்சியில் பங்கேற்றால் மட்டுமே உங்கள் மகன்/மகளுக்க திருமண முன்தயாரிப்பு சான்றிதழ் வழங்கப்படும்.
- பங்கு அருள்பணியாளர்கள் அறிமுகக் கடிதம் கொடுத்து, இளைஞர்/இளம்பெண்களுடன் அவர்களது பெற்றோர்களும் தவறாமல் பங்கேற்க கூடுதல் கவனம் செலுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
- பங்கேற்பாளர்கள் தங்களுடன் திருவிவிலியமும்
பங்கு அருள்பணியாளரின் பரிந்துரைக் கடிதமும்
பயிற்சி கட்டணமாக எண்ணூறு ரூபாயும் (ரூ.800/-) எடுத்துவர அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

**குடும்பநல பணிக்குழுவின் தொடர் நிகழ்வுகள்**

குடும்ப ஆற்றுப்படுத்துதல் நிகழ்வு :

கலப்பு திருமணங்கள், முறைப்படுத்தப்படும் திருமணங்களுக்கு சிறப்பு தனிவகுப்புகள் நடைபெறும்.

ஒருநாள் குடும்ப மறுமலர்ச்சி நிகழ்வு (காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை) மறுமலர்ச்சி தேவைப்படும் குடும்பங்களுக்கு தனிப்பட்ட விதத்தில் நடத்தப்படும்.

திருமணமான முதல் ஐந்து வருட தம்பதியர்களுக்கு சிறப்பு நிகழ்வு பங்குதளங்களிலேயே நடத்தப்படும். குறிப்பாக ஞாயிறு மதியம் 3 மணிக்கு பிறகும், திங்கள், வியாழன் ஆகிய நாள்களில் மாலை

5 மணிக்குப் பிறகும் நடத்தப்படும். குறிப்பிட்டுள்ள நாள்களிலும் நேரங்களிலும் பங்கு தந்தையர்கள் வசதிக்கேற்ப நாளையும் நேரங்களையும் தேர்வு செய்துகொள்ளலாம்.

– அருள்பணி. **சின்னப்பன்**
செயலர், குடும்பநல பணிக்குழு.

## பொதுநிலையினர் பணிக்குழு

பொதுநிலையினர் தினம் 29.6.2025 ஞாயிறு அன்று எல்லா பங்குகளிலும் கொண்டாட வழிவகை செய்யப்பட்டது.

பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு ஒருநாள் கருத்தரங்கு மறைமாவட்ட அளவில் மேய்ப்புப் பணி நிலையத்தில் 28.6.2025 சனிக்கிழமை காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 4 மணிக்கு ஆயர் தலைமையிலான திருப்பலி கொண்டாட்டத்துடன் நிறைவு பெற்றது. இக்கருத்தரங்கிற்கு அனுமதியும் ஆசீரும் நல்கிய நமது மறைமாவட்ட ஆயருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா வகையிலும் துணைநின்று உதவிய அருள்பணி. ஜாக்சன் லூயிஸ் அவர்களுக்கும் கருத்தரங்கில் பங்குபெற்று உரையாற்றிய பேரருள்திரு. ஆரோக்கிய சவரியப்பன், அருள்பணியாளர்கள் இசையாஸ். ஆரோக்கியசாமி, குரூஸ் அருள்ராஜ், அருள்ஜோதி, போஸ்கோ மதலைமுத்து, டோனி பால் ஆகியோருக்கும் ஆர்வமுடன் மக்களை கருத்தரங்கிற்கு அனுப்பி வைத்த பங்குதந்தையர்களுக்கும் பங்குபெற்ற 43 பொதுநிலையினருக்கும் கருத்தரங்கு சிறப்பாக நடைபெற உதவிய மேய்ப்புப் பணி நிலைய பணியாளர்களுக்கும் நன்றிகளையும் செபங்களையும் உரித்தாக்குகிறேன்.

**கருத்தரங்கில் பங்குபெற்ற மறைவட்டங்களின் விவரம் :**

தருமபுரி மறைவட்டம் - தருமபுரி, கோவிலூர், செல்லியம்பட்டி, பாலக்கோடு, நெல்லிமரத்துப்பட்டி.

அரூர் மறைவட்டம் - பொம்மிடி, பி.பள்ளிப்பட்டி, தென்கரைக் கோட்டை, வேப்பம்பட்டி, ஊத்தங்கரை.

கிருஷ்ணகிரி மறைவட்டம் - எலத்தகிரி, சுண்டம்பட்டி, கந்திக்குப்பம்

ஒசூர் மறைவட்டம் - டிவைன் நகர், மத்திகிரி.

தேன்கனிக்கோட்டை மறைவட்டம் - தேன்கனிக்கோட்டை, தாசரப்பள்ளி, தின்னூர்-கோபசந்திரம், சேசுராஜபுரம், பிலிகுண்டு.

கருத்தரங்கின்போது நடைபெற்ற குழு பகிர்வின் அறிக்கைகளில் குறிப்பிடத்தக்கது:

குழு பகிர்வுக்கான வினா: திருஅவையின் பணிகளில் குடும்பத்திற்கு ஒருவராவது பங்கேற்பதை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

1. முதலில் குடும்பங்கள் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட செப வாழ்வை ஊக்குவித்தல்
2. பங்குதளங்களில் பல குழுக்களை உருவாக்கி வாய்ப்புகளை அதிகரித்தல்.
3. திருஅவையில் நடைபெறும் நிகழ்வுகளை தெளிவான விவரங்களுடன் பங்கிலுள்ள அனைவரிடமும் கொண்டு சேர்த்தல்.
4. ஆர்வமுடன் செயல்படாத குடும்பங்களை கண்டறிந்து அவர்களின் திறமைக்கேற்ப ஊக்கப்படுத்துவது.
5. பங்கில் நிர்வாகத்தில் உள்ளவர்கள் அனைவரும் அருள்பணியாளருடன் சேர்ந்து எல்லாரையும் ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.
6. திருஅவையின் படிப்பினைகளை ஆர்வமுள்ளவர்கள் படிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்துதல்.
7. திருஅவையில் பணிபுரிய உதவும் திறன் வளர் பயிற்சிகளில் ஆர்வமுள்ளவர்களை ஊக்கப்படுத்துதல்.
8. பொதுநிலையினருக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை அதிகமாக நடத்துதல்.
9. திருஅவையில் வாய்ப்புகளை பகிர்ந்து கொடுத்து பலரும் இணைந்து செயல்பட முயற்சியெடுத்தல்
10. திருஅவையின் திருமடல்களையும் போதனைகளையும் அனைவரிடமும் கொண்டு செல்லுதல்.

மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின் நிர்வாகத்திற்கு மறைவட்டத்திற்கு ஒருவர் வீதம் ஐந்து நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதன் விவரம்:

1. தருமபுரி மறைவட்டம் - பிரான்சிஸ், தருமபுரி
2. கிருஷ்ணகிரி மறைவட்டம் - சாம்சன் எட்வின் சுந்தர்ராஜ், எலத்தகிரி
3. அரூர் மறைவட்டம் - ஸ்டீபன், பொம்மிடி
4. ஓசூர் மறைவட்டம் - லாரன்ஸ், மத்திகிரி
5. தேன்கனிக்கோட்டை மறைவட்டம் - ஆரோக்கியசாமி, தேன்கனிக்கோட்டை

- அருள்பணி. சின்னப்பன்
செயலர், பொதுநிலையினர் பணிக்குழு.

---

## "**எல்லாருக்கும் மறைக்கல்வி**" வழங்குதல் பற்றி தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்வி பணிக்குழு தலைவர் **மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ்** எழுதியுள்ள சுற்றறிக்கை

உயிர்த்த நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவில் அன்பிற்கினியவர்களே!

மறைக்கல்விப் பணிகளால் இறைமக்களின் நம்பிக்கை வாழ்வை ஒளிரச் செய்யும் உங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!

இயேசு ஒரு மாபெரும் மறைக்கல்வியாளர். அவரது வாழ்வும் பணிகளும் போதனைகளும் வல்ல செயல்களும் அவர் ஏற்ற பாடுகளும், இறப்பு, உயிர்ப்பு விண்ணேற்றம் என அனைத்துமே மறைக்கல்வியின் பரிமாணங்கள். இயேசுவின் ஏக்கமும் நோக்கமும்

வானகத் தந்தையின் எல்லையில்லா அன்பை இந்த மானிடம் உள்ளுணர வேண்டும் என்பதே. அந்த உயர்ந்த சிந்தனையை அவர் பலவிதங்களில் பறைசாற்றினார். அதற்காக அவர் ஒரு கட்டமைப்பை உருவாக்கி, தாம் சென்ற இடங்களையும் சந்தித்த மக்களையும் மறைக்கல்விக் களமாக்கினார்.

இயேசு, தாம் அறிமுகப்படுத்திய இறையாட்சியை இம்மண்ணில் மலரச்செய்ய மறைக்கல்வியை ஒரு கருவியாக்கினார். அவரது மறைக்கல்வியில் உவமைகள், உருவகங்கள், நாட்டு நடப்புகள், கேள்வி-பதில்கள், உரையாடல்கள், அறிவுறுத்தல்கள், பாராட்டுகள், எச்சரிக்கைகள் என எல்லாம் நிறைந்திருந்தன. தாம் எடுத்துச் சொல்ல விரும்பிய எல்லாவற்றையும் மிக எளிமையாகவும் எதார்த்தமாகவும் எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்திலும் கையாண்டார்.

இயேசுவைப் பின்தொடர்ந்து பல மறைப்பணியாளர்கள் மறையை அறிவிக்கும் நோக்கில் தம் நாடு, வீடு, வசதி, கலாச்சாரம் என எல்லாவற்றையும் துறந்து நம் நாட்டிற்கு வந்து, தங்கள் உயிரைத் துச்சமெனக் கருதி அர்ப்பணத்தோடு உழைத்த வரலாற்றை நாமறிவோம். அவர்கள் மறைபணியாற்றும் நோக்கில் பல பங்கு தளங்களை உருவாக்கினர். பள்ளிக்கூடங்களை கட்டியெழுப்பினர். துறவு மடங்களை ஏற்படுத்தினர். குருமடங்களைத் தொடங்கினர். பற்பல தொண்டு நிறுவனங்களை நிறுவினர். எல்லாவற்றின் ஊடாகவும் நம்பிக்கை வளர் கல்வியான மறைக்கல்வியை வழங்கி கிறிஸ்துவின் மனநிலையில் மாணவச் செல்வங்களை உருவாக்கினர்.

மறைக்கல்வி என்பது ஒவ்வொரு மனிதனையும் இறைஇயேசுவின் மனநிலையில் உருவாக்கி இறைநம்பிக்கையில் முதிர்ச்சியடையச் செய்து நற்செய்தி மதிப்பீடுகள் காட்டும் வாழ்க்கை முறையில் செயல்பட பயிற்றுவிக்கும் கல்வி. மறைக்கல்விதான் திருஅவைக்குள் பல்லாயிரக் கணக்கான புனிதர்களையும், மறைசாட்சியர்களையும் இலக்கு தெளிவோடு இறையாட்சிப் பாதையில் பயணிக்கவும் பணியாற்றவும் உருவாக்கத்தைக் கொடுத்துள்ளது. மறைக்கல்விதான் இந்தியாவில், சிறப்பாக தமிழ்நாட்டில் இதுவரை ஆயிரமாயிரம் அருள்பணியாளர்களையும் துறவியரையும் அர்ப்பணமிக்கப் பொதுநிலையினரையும் உருவாக்கி அவர்களை உலகின் உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக ஆன்மீகப் பணிகளையும் சமூகப் பணிகளையும் பொறுப்போடும் பொறுமையோடும் செய்திட தூண்டியுள்ளது.

தமிழக மறைக்கல்வியின் தந்தை என வருணிக்கப்படும் பாரீஸ் மறைபோதக அருள்தந்தை தாமஸ் கவான் டஃபி(1888-1942)

மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை "திருமுழுக்குப் பெற்று மறைபணி ஆற்றத் தேர்ந்துகொள்ளப்பட்ட நம் பணிகளில் மறைக்கல்வியே மத்தி; மற்றப் பணிகளெல்லாம் அதைச் சுத்தி" என்று பாமரத் தமிழில் பாங்காய் பகர்ந்துள்ளார்.

இன்று தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பங்குகள், அவற்றை வழிநடத்த பங்கு அருள்பணியாளர்கள் ஒருபுறம். மழலையர், தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை என பத்தாயிரத்திற்கு மேலான பள்ளிக்கூடங்கள் அவற்றை மேலாண்மை செய்யவும் நிர்வகிக்கவும் ஆயிரக்கணக்கான தாளாளர்கள், தலைமை யாசிரியர்கள், துறவிகள், பொதுநிலையினர் என மறுபுறம் இச்சூழலில் நம் பங்குகளிலும் பள்ளிகளிலும் மறைக்கல்விக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன?

இந்தியத் திருஅவை தன்னகம் கொண்டுள்ள 136 மறை மாவட்டங்களுக்கும் மறைக்கல்விப் பணிக்கு முன்னோடியாகத் திகழ்வது எதுவெனில் 18 மறைமாவட்டங்களைக் கொண்டு இயங்கும் தமிழகத் திருஅவைதான் என்ற பெருமை நமக்கு உண்டு. ஆனால் தமிழ்நாட்டின் கத்தோலிக்கப் பங்குகளில் இன்னும் ஞாயிறு மறைக்கல்வி நடத்தப்படாத பங்குகள் பலநூறு உள்ளன என்பது அதிர்ச்சி தரும் தகவல். அருள்பணியாளர்கள், துறவியர் நிர்வகிக்கும் பள்ளிக்கூடங்களில் மறைக்கல்வி, நன்னெறி வகுப்புகள் நடத்தப்படாதது மிகவும் வேதனைக்குரிய செய்தி. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு மறைக்கல்வி வழங்காமலிருப்பது இறையாட்சி மதிப்பீடுகளுக்கும் கத்தோலிக்க திருஅவைக்கும் அதன் போதனைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் நாம் திருஅவைக்கு அளித்த வாக்குறுதிகளுக்கும் முற்றிலும் முரணான செயலாக தோன்றவில்லையா? மறைக்கல்வி இன்றி நாளைய நலமான திருஅவையைக் கற்பனை செய்துகூட பார்க்க இயலாது. ஏனெனில் மறைக்கல்விதான் திருஅவையின் உயிர் மூச்சு.

நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமாக (திவ.எண். 10) இருப்பதுபோல, இறைவார்த்தை, இறைநம்பிக்கை வாழ்வின் உயிர்நாடியாக (இவெ.எண் 24) இருப்பதுபோல, மறைக்கல்வி இறை நம்பிக்கைப் பயணத்தின் உயிர்மூச்சு (கிக. எண் 4) என்பதை உளமாற உணர்ந்து களமிறங்கிச் செயல்பட வேண்டிய காலக்கட்டம் இது. மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காத

பங்குகளும் பள்ளிகளும் அல்லது அவற்றை நிர்வகிப்போரும் மறைமுகமாக திருஅவையையும் அதன் தலைவராகிய கிறிஸ்துவையும் கண்டுகொள்ளாத அபாயகரமான செயலை மேற்கொள்கின்றனரோ என்றே நினைக்கத் தோன்றுகிறது.

திருத்தூதர் பவுல், தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? (உரோ 10:14-15) என எழுப்பும் பல கேள்விகளுக்கு நாம் கூறும் பதில்மொழி என்ன? மழலைப் பவருவத்திலும் பதின் பருவத்திலும் வழங்காத மறைக்கல்வியையும் நன்னெறியையும் நம் பிள்ளைகளுக்கு எந்தப் பருவத்தில் வழங்கப் போகின்றோம்? ஏனெனில், மறைக்கல்வி, நன்னெறி ஏனைய பாடங்களைப் போன்றவை அன்று; மாறாக நம்பிக்கையை;ம நல்வாழ்வையும் அனுபவமாக்கும் வாழ்வியல் கலைகள். விரும்பினால் நடத்தவதற்கும், விரும்பாவிட்டால் கண்டுகொள்ளா மலிருப்பதற்குமான விருப்பப் பாடங்கள் அல்ல. இப்பணிப் பொறுப்பிலிருக்கும் ஒவ்வொருவர்மீதும் சுமத்தப்பட்டுள்ள கட்டாயக் கடமை. இதில் யாருக்கும் விதிவிலக்கு இருக்க முடியாது. மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தே இரண்டாம் வத்திக்கான் சங்கம் “திருஅவை தன் குழந்தைகள் அனைவரின் ஒழுக்கம், மறைக்கல்வியை தளரா ஊக்கத்துடன் வழங்கவேண்டிய முக்கியமான பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்” (கிறிஸ்தவக் கல்வி எண்.7) என அறிவுறுத்துகின்றது. அத்தோடு கத்தோலிக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் “உலகியல் அறிவு, மறை அறிவு ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருப்பதோடு திருத்தூது உணர்விலும் ஊறித் திளைத்து, தங்கள் வாழ்வாலும் படிப்பினையாலும் ஒரே ஆசிரியரான கிறிஸ்துவுக்குச் சான்றுபகர வேண்டும் (கிறிஸ்தவக் கல்வி எண். 8) என எதிர்பார்க்கின்றது.

எனவே, இந்த கல்வி ஆண்டு முதல் தமிழகத்தில் எல்லாப் பங்குத் தளங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் அவற்றின் பொறுப்பிலிருப்போர் ஞாயிறு மற்றும் பள்ளி மறைக்கல்வியையும் நம் பள்ளிகளில் பயிலும் பிற சபைகள், சமயங்கள் சார்ந்த மாணவர்களுக்கு நன்னெறிக் கல்வியையும் வழங்க வேண்டும் என தமிழக ஆயர் பேரவையின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மறைக்கல்விக்கான பாடநூல்களை திண்டிவனம், முப்பணி மையமும் நன்னெறிக் கல்விக்கான நூல்களை திண்டுக்கல் வைகறைப் பதிப்பகமும் வெளியிட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குத் தேவையான பாடநூல்களை உங்கள் மறைமாவட்ட மறைக்கல்விப் பணிக்குழு செயலர்/மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர்/பள்ளிகளின் கண்காணிப்பாளர் ஆகியோரை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம். மேற்காணும் பொறுப்பிலுள்ள அருள்பணியாளர்கள் தங்கள் பங்குகள், பள்ளிகளைச் சந்தித்து கலந்துரையாட வருகையில் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க அன்பாய் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத் திருஅவையானது 2011-2012ஆம் ஆண்டுதனை மறைக்கல்வி ஆண்டாக அறிவித்து எல்லாருக்கும் மறைக்கல்வி எனும் மையச் சிந்தனையோடு கொண்டாடியதை இந்நேரத்தில் நினைவுகூர்கிறேன். மறைக்கல்வி தொடர்பான நம் திட்டங்களும் பணிகளும் அந்த ஆண்டோடு முற்றுப்பெற்றுவிடவில்லை. அதன் ஒளியில் நாம் இன்னும் ஆழமாகத் திட்டமிட்டு பணிகளைத் தொடரக் கடமைப்பட்டுள்ளோம்.

இத்தருணத்தில், ஒவ்வொரு மறைமாவட்டத்திலுமுள்ள பங்குகளில் நடைபெறும் ஞாயிறு மறைக்கல்வி, பள்ளி மறைக்கல்வி பற்றிய தகவல்களை சேகரித்து தமிழக ஆயர் பேரவைக்கு அனுப்ப மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழுச் செயலர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நிலவும் இந்தியச் சூழலில் மறைக்கல்வி, நன்னெறி தவிர்க்க இயலாத வாழ்வியல் பாடங்கள் என்பதைக் கருத்தில்கொண்டு மாணவச் செல்வங்களை உருவாக்கிட உங்கள் எல்லாரையும் மிக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

+ மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**
(தலைவர், தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்வி பணிக்குழு)

## தருமபுரி சமூக சேவை சங்கம் - ஜுன் 2025

**1. தமிழக சமூகப்பணி மையம்** (TASOSS) **:**

தமிழக சமூகப்பணி மையத்தின் 46ஆவது பொது குழு கூட்டமானது 5.6.2025 வியாழக்கிழமையன்று தமிழகத்திலுள்ள அனைத்து மறைமாவட்ட சமூகப்பணி மையங்களின் இயக்குநர்கள் பங்கேற்புடன் திருச்சி-சமூகப்பணி மையத்தில் TASOSS-இன் தலைவர் மேதகு ஆயர் தாமஸ் அக்வினாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக சமூகப்பணி மையத்தின் இயக்குநராக சிறந்த முறையில் பணியாற்றிய அருள்பணி. இரா.ஜேசுதாஸ் அவர்கள் இந்திய அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காரித்தாஸ்-இந்தியா நிறுவனத்தின் முதன்மை இயக்குநராக பொறுப்பேற்றுள்ளதைப் பாராட்டி அவர்களுக்கு பிரியாவிடை வழங்கப்பட்டது. TASOSS-இன் புதிய இயக்குநராக அருள்பணி. டேவிட் ராஜேஷ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இக்கூட்டத்தில் நமது மறைமாவட்டத்தின் சார்பாக தருமபுரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருள்பணி. சி.மரியப்பன் அவர்கள் கலந்துகொண்டார்.

**2. கோல்பிங் இந்தியாவின் தேசிய அளவிலான திட்ட மதிப்பாய்வு/ ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் :**

கோல்பிங் இந்தியா திட்டத்தின் இயக்குநர்கள், ஒருங்கிணைப் பாளர்கள் பங்கேற்ற இக்கூட்டமானது Marching Together to Strengthen the Kolping Family எனும் மையக்கருத்தில், ஜுன் மாதம் 11, 12 ஆகிய தினங்களில் சென்னை, ICSA பரிபூர்ணா மையத்தில் தேசிய இயக்குநர், அருள்திரு. முனைவர். மரியசூசை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு மறைமாவட்டத்தின் கோல்பிங் செயல்பாடுகள் ஒளி விளக்கப் படங்களுடன் (PPT) திட்ட ஒருங்கிணைப்பாளர்களால் தெளிவாக விவரிக்கப்பட்டது. எதிர்கால செயல்பாடுகளுக்கான குழு கலந்தாய்வு நடைபெற்றது. இவ்விரண்டு நாள் கூடுகையில் நமது மறைமாவட்டத்தின் சார்பாக தருமபுரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருள்பணி. மரியப்பன், கோல்பிங்

ஒருங்கிணைப்பாளர்கள் திரு. குழந்தைசாமி, திரு. அந்தோணி அமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**3. கோல்பிங் இந்தியா திட்டத்தின்கீழ் சுழல்நிதி வழங்குதல் :**

13.6.2025 வெள்ளிக்கிழமையன்று கோல்பிங் இந்தியா திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும்

| | | |
|---|---|---|
| வளன்நகர், சூசையப்பர் கோல்பிங் குழு | - | ரூ. 1,00,000/- |
| வேப்பம்பட்டி, கணபதி கோல்பி குழு | - | ரூ. 1,00,000/- |
| முருகன் கோவில் நகர், நேசம் கோல்பிங் குழு | - | ரூ. 1,00,000/- |
| சூளகிரி, பவுல் கோல்பிங் குழு | - | ரூ. 1,00,000/- |
| குண்டியால்நத்தம், பாவை கோல்பிங் குழு | - | ரூ. 1,00,000/- |

ஆகிய 5 குழுக்களுக்குமாக ஐந்து இலட்சம் ரூபாய் சுழல்நிதியானது தருமபுரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் சி.மரியப்பன் அவர்களால் வழங்கப்பட்டது.

**4. SPSFWவின் இணையவழி மீளாய்வு கூட்டம் :**

SPSFW, விளிம்பு நிலையிலுள்ள விவசாயிகள், விளிம்பு நிலையிலுள்ள சுயஉதவிக் குழு பெண்களுக்கான வாழ்வாதார முன்னேற்ற திட்டத்தினுடைய செயல்பாடுகள் பற்றிய இணையவழி மீளாய்வு கூட்டமானது 13.6.2025 வெள்ளிக்கிழமையன்று மாலை 3 மணியளவில் நடைபெற்றது. SPSFWவின் திட்ட மேலாளர் திருமிகு. கிப்டா சுபாசினி அவர்கள் இணையவழி கூட்டத்தை வழிநடத்தினார். இக்கூட்டத்தில் திட்டத்தின் செயல்பாடுகள் சார்பாகவும் விவசாயிகளுக்கு இலவச விதைகள் வழங்குதல், மண்பரிசோதனை அட்டைகள் வழங்குவது சார்பாகவும் பேசப்பட்டது. நமது தருமபுரி சமூக சேவை சங்கத்தின் சார்பாக திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமிகு. அந்தோணி அமல்ராஜ் இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

**5. SPSFW – தொழில்முனைவோர் பயிற்சி கூட்டம் :**

SPSFW விளிம்பு நிலையிலுள்ள விவசாயிகள், விளிம்பு நிலையிலுள்ள சுயஉதவிக் குழு பெண்களுக்கான வாழ்வாதார முன்னேற்ற திட்டத்தின், தொழில் முனைவோர் பயிற்சி

கூட்டமானது, 8 மறைமாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சுயஉதவிக் குழு பெண்கள் பங்கேற்புடன் 20.6.2025 வெள்ளிக்கிழமையன்று KMSSS கும்பகோணம் பல்நோக்கு சமூகப்பணி மையத்தில் TASOOSஇன் இயக்குநர் அருள்பணி. டேவிட் ராஜேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. SPSFWவின் திட்ட மேலாளர் திருமிகு. கிப்டா சுபாசினி அவர்கள் பயிற்சி கூட்டத்தை வழிநடத்தினார். இக்கூட்டத்தில் நமது மறைமாவட்டத்தின் சார்பில் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமிகு. அந்தோணி அமல்ராஜ் அவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.

## தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

### 1. போதையில்லா பாதை குறித்த விழிப்புணர்வு பயிற்சி கூட்டம்:

தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் சார்பில் போதையில்லா பாதை எனும் மையக்கருத்தில் விழிப்புணர்வு பயிற்சி கூட்டமானது. 12.6.2025 வியாழக்கிழமையன்று காலை 11 மணியளவில் தருமபுரி, அமலா ஆங்கில துவக்கப் பள்ளியில், மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் செயலாளர், அருள்பணி. சி.மரியப்பன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் செயலர் அவர்கள் மாணவர்களை பாதிக்கும் போதை பழக்கங்கள் பற்றிய தவல்களையும் குழந்தைகள் கைபேசிக்கு அடிமையாகின்ற அவலநிலை குறித்தும் விழிப்புணர்வு கருத்துரை வழங்கினார். கருத்தூட்டுநராக திருமிகு. சரண்யா அவர்கள் துரித உணவுகளின் தீய விளைவுகள், தற்போது மனதையும் உடலையும் பாதிக்கும் கைபேசி, குழந்தைகளின் மத்தியில் அதன் தாக்கங்கள் ஆகியவை குறித்து விழிப்புணர்வு கருத்துரையாற்றினார். இப்பயிற்சி கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் கலந்துகொண்டனர். கூட்டத்தின் இறுதியில் மாணவர்களுக்கு பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டது.

### 2. நலவாழ்வு பணிக்குழுவின் செயலர்களுக்கான இணையவழி கலந்துரையாடல் கூட்டம்:

16.6.2025 திங்கள் கிழமையன்று மாலை 4 மணியளவில் தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழுவின் தலைவர், மேதகு ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் அனைத்து மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் செயலர்கள்

பங்கேற்புடன் இணையவழிக் கூட்டம் நடைபெற்றது. கடந்த ஓராண்டு மாநில செயலராக சிறந்த முறையில் பணியாற்றிய அருள்பணி. ஜான் கென்னடி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்து பிரியாவிடை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதம் நடைபெறும் TOT பயிற்சியாளர்களுக்கான பயிற்சி கூட்டத்திற்கான நாள், நேரம், இடம், கருத்தூட்டுநர்கள் ஆகியவை குறித்து கலந்தாலோசிக்கப் பட்டது. நமது மறைமாவட்டத்தின் சார்பாக செயலர், அருள்பணி. சி.மரியப்பன் அவர்கள் கலந்துகொண்டு தனது கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

**3. 5ஆவது அகில உலக தாத்தா-பாட்டிகள், முதியோர்கள் தினவிழா:**

தலைப்பு : Blessed are those who have not lost hope – Sir 14:2
நம்பிக்கையை இழக்காதவர்கள் பேறுபெற்றவர்கள்
-சீ.ஞானம் 14:2

தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் சார்பாக வாழ்த்துகள்!
அன்பு அருள்பணியாளர்களே!

தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு வழியாக வருகின்ற ஜுலை மாதம் 27ஆம் தேதி ஆண்டின் பொதுக்காலம் 17ஆம் ஞாயிறை ஐந்தாவது அகில உலக தாத்தா பாட்டிகள்/முதியோர்கள் தினமாகக் கொண்டாட அன்புடன் அழைக்கிறது.

இயேசுவின் தாத்தா-பாட்டிகளான புனித ஜோக்கிம்-அன்னா ஆகியோரின் விழாவிற்கு அருகில் கொண்டாடப்படுகிறது.

எனவே, நமது மறைமாவட்டத்திலுள்ள எல்லா பங்குகளிலும் இத்தினத்தை சிறப்பிக்க நமது மறைமாவட்ட ஆயர் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சிறப்பு வழிபாட்டிற்கான குறிப்புகள் வாட்ஸ்-அப் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

- அருள்பணி. **மரியப்பன்,**
செயலர், தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

## தருமபுரி மறைமாவட்ட புலம்பெயர்ந்தோர் பணிக்குழு

புலம்பெயர்ந்தோர், அடைக்கலம் நாடுவோருக்கான சிறப்பு திருப்பலி:

புலம்பெயர்ந்தோர், அடைக்கலம் நாடுவோருக்கான சிறப்பு திருப்பலி 15.6.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மதகொண்டப்பள்ளி, தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. இச்சிறப்பு திருப்பலிக்கான ஏற்பாடுகளை பங்குத்தந்தை அருள்பணி. விஜய் அமல்ராஜ் அவர்கள் செய்திருந்தார். புலம்பெயர்ந்த கிறிஸ்தவ மக்களை அருள்சகோதரி ஜெசி அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். அருள்பணி. ஏரூஸ் கிஷோர் அவர்கள் புலம்பெயர்ந்த கிறிஸ்தவ மக்களுக்காக அவர்களின் தாய்மொழியான ஹிந்தியில் திருப்பலி நிறைவேற்றினார்கள். இத்திருப்பலிக்கான எல்லா நிகழ்வுகளையும் மறைமாவட்ட பணிக்குழுவின் செயலர் அருள்பணி. சி.மரியப்பன் அவர்கள் ஒருங்கிணைத்திருந்தார். இச்சிறப்பு திருப்பலியில் புலம்பெயர்ந்தோர் 35க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். திருப்பலி முடிந்தவுடன் அனைவருக்கும் தேநீர், பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டது.

இறுதியாக ஒவ்வொரு மாதமும் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு புலம்பெயர்ந்தோருக்காக மதகொண்டப்பள்ளி பங்கு ஆலயத்தில் சிறப்பு திருப்பலி நிறைவேற்றலாம் என தீர்மானம் செய்யப்பட்டது.

- அருள்பணி. **மரியப்பன்,**
செயலர், தருமபுரி மறைமாவட்ட புலம்பெயர்ந்தோர் பணிக்குழு

## Vatican News for the Month of June, 2025

### I.Pope: Papal representatives embody universality of Church's desire for peace

Pope Leo XIV meets with his Pontifical Representatives across the globe, and urges them to bear witness to the Church's love for the world and her desire to do anything possible to stand on the side of those in need.

As other Popes have done at their first meeting with their diplomatic representatives, Pope Leo gifted each with a ring

symbolizing their bond to the Successor of Peter, which bears the inscription “sub umbra Petri”.

“Always feel bound to Peter, guarded by Peter, sent by Peter,” said the Pope in his address. “Only in obedience and effective communion with the Pope can your ministry be effective for the edification of the Church, in communion with local Bishops.”

Papal representatives, he noted, are an image of the Catholic Church and her universality, since they hail from many nations and are sent to represent the Pope throughout the world.

At the same time, added the Pope, no other diplomatic corps is as united in communion and purpose than the Holy See’s diplomatic personnel.

“The diplomacy of the Holy See constitutes in its very personnel a model—certainly not perfect, but very significant—of the message it proposes, namely that of human fraternity and peace among peoples,” he said.

Speaking off-the-cuff, the Pope said the ministry of pontifical representatives is "irreplaceable," adding that their assistance in choosing candidates for the episcopate is truly essential.

Peter told the lame man that he had no money to offer but that he would give the man everything he had, saying to him: “In the name of Jesus Christ the Nazarene, walk!”

The Pope noted that Peter told the lame man to look at him, indicating that his ministry sought to build relationships, just as papal representatives seek to do with states and international organizations.

“Always be Peter's gaze!” he said. “Be men capable of building relationships where it is most difficult.”

Giving Jesus Christ, added the Pope, means giving “love, bearing witness to that charity that is ready for anything.”

This mission, he added, is especially important in the places where war, violence, and injustice leave people crucified.

In conclusion, Pope Leo invited his representatives to be missionaries sent by the Pope to be “instruments of communion and unity in the service of human dignity.”

“Your presence here today reinforces the awareness that Peter's role is to confirm in the faith,” said the Pope. “You yourselves need this confirmation first, in order to become its messengers, visible signs in every part of the world.”

**II.Pope at Audience: There is no cry God does not hear**

Pope Leo XIV holds his weekly General Audience and reflects on the Gospel account of the healing of the blind man who cried out to Jesus and began to follow Him after his sight was restored.

Pope Leo XIV used his catechesis at Wednesday’s General Audience to highlight “another essential aspect of the life of Jesus, namely, His healings.”

The Holy Father reflected on the Gospel account of the healing of a blind man, Bartimaeus, who cried out to Jesus as He passed through the city of Jericho on the way to Jerusalem.

Their meeting place, the Pope said, was significant, as Jesus was beginning His journey below sea level and ascending to the Holy City. Jesus’ journey prefigures His passage to the underworld, where He went after His death “to bring back that Adam who fell to the bottom and represents each of us.”

The name of the blind man, Bartimaeus, is likewise significant as representing one who has failed to live up to his calling. The Pope noted that the name can be interpreted as “son of honour or admiration,” whereas the blind man has been reduced to begging by the side of the street.

Pope Leo emphasized that Bartimaeus knows how to cry out for help, even when reproached by the crowd; and, although he is blind, “he sees better than others because he recognizes who Jesus is.”

Jesus responds to his cry because, as the Pope reminded us, “There is no cry that God fails to hear, even when we are not aware we are addressing Him.”

However, the Pope noted, Jesus does not go to Bartimaeus but calls him to Himself. Bartimaeus, for his part, must “cast off his cloak,” giving up his security in order to allow himself to be healed.

“Many times, it is precisely our securities that stand in our way” Pope Leo said. Like the blind man, we must appear before Christ with all our vulnerabilities exposed; “this is a fundamental step in any journey of healing.”

Finally, the Holy Father draws attention to Jesus’ question, “What do you want Me to do for you”; and Bartimaeus’ response: “Let me recover my sight.” His answer, which can also mean “to look up,” shows that the blind man desires not only to see again, but to “regain his dignity.”

“Let us cry out for them, too,” he said, in the certitude “that the Lord will hear us and stop.”

## III.Pope on Pentecost: The Spirit shatters our inner chains and transforms us

During the Mass for the Solemnity of Pentecost, Pope Leo XIV recalls how the Holy Spirit accomplished 'something extraordinary' in the lives of the Apostles, and suggests that today, the Holy Spirit likewise descends upon us, ready to shatter our inner chains, fears, and hardened hearts, to make us new.

"Today, too, what took place in the Upper Room takes place anew in our midst. Like a mighty wind that overtakes us, like a crash that startles us, like a fire that illuminates us, the gift of the Holy Spirit descends upon us."

Pope Leo XIV offered this comforting reminder during his Mass for the Solemnity of Pentecost, which also marked the Mass for

the Jubilee of Ecclesial Movements, Associations and New Communities, on Sunday morning in St. Peter's Square.

During his homily, the Holy Father underscored how the Holy Spirit accomplished "something extraordinary" in the lives of the Apostles.

**Shatters inner chains of Apostles and anoints them**

While "following Jesus' death, they had retreated behind closed doors, in fear and sadness," now, Pope Leo observed, "they receive a new way of seeing things, an interior understanding that helps them to interpret the events that occurred and to experience intimately the presence of the Risen Lord."

In this context, the Pope marveled that the Holy Spirit "overcomes their fear, shatters their inner chains, heals their wounds, anoints them with strength and grants them the courage to go out to all and to proclaim God's mighty works."

Pope Leo XIV recalled that at Pentecost, the doors of the Upper Room were opened because the Spirit opens borders, as he quoted the late Pope Benedict XVI's words in a 2005 Pentecost homily: "The Holy Spirit bestows understanding. The Spirit overcomes the 'breach' that began in Babel, the confusion of mind and heart that sets us one against the other. The Spirit opens borders..."

**'The Spirit opens borders'**

Calling this an eloquent image of Pentecost, Pope Leo XIV went on to reflect on this idea, noting the Spirit "opens border" first of all in our hearts, and "is the Gift that opens our lives to love."

"His presence," the Pope reassured, "breaks down our hardness of heart, our narrowness of mind, our selfishness, the fears that enchain us and the narcissism that makes us think only of ourselves."

**Pentecost renews**

The Holy Father also recognized that the Holy Spirit also opens borders between peoples, underscoring that "God's 'breath'

unites our hearts," "makes us view others as our brothers and sisters," and "breaks down barriers and tears down the walls of indifference and hatred."

With this in mind, Pope Leo XIV reaffirmed, "Pentecost renews the Church, renews the world!"

"May the strong wind of the Spirit," Pope Leo concluded before imploring the Blessed Mother in prayer, "come upon us and within us, open the borders of our hearts, grant us the grace of encounter with God, enlarge the horizons of our love and sustain our efforts to build a world in which peace reigns."

**IV.Pope Leo XIV meets Pontifical Commission for the Protection of Minors**

In the restructuring of the Roman Curia, Pope Francis had elevated the Commission, which works to safeguard and prevent abuse and which he instituted at the start of his papacy, to be within the Vatican's Dicastery for the Doctrine of the Faith.

Pope Leo, likewise, appealed to the Commission to continue this direct communication with him, in order to ensure maximum efforts are made to protect minors and the vulnerable, in all respects.

The Church has taken significant steps to address cases of abuse, including the establishment of their Commission, the updating of canon law and other instruments that provide mechanisms for reporting abuse and misconduct by bishops, the obligation of mandatory reporting to civil authorities in certain jurisdictions, and a growing body of national guidelines and safeguarding protocols. But even so, the Commission noted that more needs to be done on various levels.

In April 2022, Pope Francis asked the Commission to present him with an Annual Report, to serve as a "reliable account of what the Church is doing, and what needs to change, in order to help competent authorities act."

**V.Pope at Audience: Looking for meaning in life? Turn to God**

During his weekly General Audience, Pope Leo XIV reminds the faithful that God waits for us with open arms, no matter how late we are in responding to His call, and also reminds young people that if they are seeking meaning in Life, God will offer it to them and never disappoint.

"God never gives up on us; he is always ready to accept us and give meaning and hope to our lives, however hopeless our situation may seem and however insignificant our merits may appear. "

Pope Leo XIV gave this comforting reminder during his weekly Wednesday General Audience in the Vatican as he continued his catechetical series on 'Jesus Christ Our Hope" for the Jubilee Year.

This week, the Pope recalled Jesus' Parable of the workers of the last hour, in the Gospel passage according to St. Matthew, in which the landowner who gives the same wage even to the workers of the eleventh hour, to those who arrived much later than the others, illustrating the Lord's immense mercy.

In his catechesis, Pope Leo recalled how the workers hired first are disappointed and unable of seeing the beauty of the landowner's gesture, but, the Pope explained, "He wasn't unfair—he was simply generous. He didn't look only at merit, but also at need."

**God wants to give everyone full life**

The Parable, the Pope suggested, challenges us to examine what is truly just.For the owner of the vineyard, "that is, for God," the Holy Father expressed, justice means that everyone receives what they need in order to live, while likewise observing that He called the workers personally, knows their dignity, and wants to pay them according to that dignity.

God, Pope Leo went on to marvel, wants to give everyone His Kingdom, with "a life that is full, eternal, and joyful." "And that,"

he highlighted, "is exactly what Jesus does with us: He doesn't rank us." And "to anyone who opens their heart to Him," Pope Leo insisted, "He gives all of Himself."

In light of this Parable, Pope Leo acknowledged that a Christian nowadays might be tempted to think, "Why start working right away? If the reward is the same, why work more?," observing that St. Augustine responded to these doubt, saying: "Why then do you delay to follow the one who calls you, when you are sure of the reward but uncertain of the day? Be careful not to deprive yourself, through your delay, of what He will give you according to His promise."

**Roll up your sleeves, God won't disappoint you**

Before concluding, Pope Leo said he wished to say something to the faithful, and especially the young people.

"Don't wait, but respond with enthusiasm to the Lord who calls us to work in His vineyard," he underscored, adding, "Don't postpone—roll up your sleeves, because the Lord is generous and you won't be disappointed!"

**God will answer what is the meaning of your life**

By working in God's "vineyard," Pope Leo XIV underscored, "you will find an answer to that deep question you carry within you: what is the meaning of my life?"

Therefore, the Pope stressed, "let's not be discouraged! Even in the dark moments of life, when time passes without giving us the answers we seek, let us ask the Lord to come out again and find us where we are waiting for Him," for "He is generous, and He will come soon!"



Feast Mass at Uthangarai



Feast Mass and Confirmation at Hosur



Jubilee Inauguration - Krishnagiri Vicariate



Inaugural Mass at St.Joseph's Minor Seminary

## Birthday Wishes

Rev.Fr. F.JACKSON LOUIS - 7.7.1976
Rev.Fr. Y.GNANAPRAGASAM - 12.7.1984
Rev.Fr. S.SAVARIAPPAN - 17.7.1956
Rev.Fr. S.ISAIAS - 17.7.1974
Rev.Fr. S.JAMES - 17.7.1974
Rev.Fr. ARUL ROSARIO - 17.7.1985
Rev.Fr. M.BENJAMIN - 19.7.1969
Rev.Fr. A.ALVIN KUMAR - 22.7.1995
Rev.Fr. M.ANTONYSAMY - 23.7.1947
Rev.Fr. A.BOSCO MADALAIMUTHU - 23.7.1978
Rev.Fr. P.JAMES PETER - 25.7.1995












## Feastday Wishes

Rev.Fr. A.THOMAS - 3rd July
Rev.Fr. S.HENRY GEORGE - 13th July
Rev.Fr. HENRI BONAL MEP - 13th July
Rev.Fr. A.MADHALAIMUTHU - 22nd July
Rev.Fr. ANTONY MADHALAIMUTHU - 22nd July
Rev.Fr. K.AROCKIA JAMES - 25th July
Rev.Fr. S.JAMES - 25th July
Rev.Fr. S.CHRISTOPHER - 25th July










## Ordination day Wishes

Rev.Fr. M.ANTONYSAMY - 29.7.1974



## Necrology

Rev.Fr. C .SEBASTIAN - 3.7.1991
Rev.Fr. A.KULANDAISAMY - 12.7.1963
Rev.Fr. RIGOTTIER - 13.7.1988